REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 19உ திங்கள் (5—12—55) ★ ★ வெளியூர்: கார்த்திகை 20உ செவ்வாய் (6—12—55) [இதழ் 148

பிலாய் உருக்கு தொழிற்சாலையில் ரஷ்ய நிபுணர்கள்

புதுடில்லி, டிச. 3—

பிலாய் உருக்குத் திட்டம் சம்பந்தமாக இரண்டு ரஷ்ய நிபுணர்கள் வேலை செய்து வருகின்றனர் என்றும், திட்டப் பகுதி வேலைக்காகக் கடந்த அக்டோபர் திங்கள் இறுதிவரையில் ரூ. 7,20,000 செலவிடப்பட்டிருக்கிறதென்றும் அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் தெரிவித்திருக்கிருர்.

தமிழ் நாட்டில் புயல் விளைவித்த கோரங்கள்!

50 பேர் வரை உயிர் இழந்தனர்; பல்லாயிரம் பேர் வீடிழந்து தவிப்பு; பெருத்த அளவில் பொருட்சேதம்!

காமராசர் செய்யப்போவதென்ன?

சென்னை, டிச. 5—

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் மீண்டும் புயல் விசி கோரம் விளைவித்திருக்கிறது.

மதுரை, திருச்சி, இராமநாதபுரம் மாவட்டங்களும் இந்த ஆண்டு, புயலின் கொடுமைக்கு ஆளாகியிருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, அதிராமபட்டினம், மன்னுர்குடி, திருத்துறைப்பூண்டி வட்டாரங்களில் புயல் கொடுமையினுல் பல ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

விடு வாசல் இழந்து தவிக்கும் மக்கள் ஏராளம்; பல்லாயிரம் பேரின் சொத்துக்கள், விளைபொருள்கள் நாசமாகியிருக்கின்றன.

நாசமடைந்த சொத்துக்களின் மதிப்பு இன்னும் இறுதியாகக் கணக்கிடப்படவில்லை; என்றுலும், பல இலட்சம் ரூபாய் பெறுமான சொத்துக்கள் நாசமாகியிருக்கின்றன.

இத்தனைக்கும் மேலாக சுமார் 50-பேர்களின் உயிரும் புயலால் கொள்ளை போயிற்று என்ற சோகச் செய்தியும் கிடைத்திருக்கிறது.

மேலும், எண்ணற்ற கால்நடைகளும் பலியாகியிருக்கின்றன.

பல இடங்களில் பஸ் போக்குவரத்து, செய்திப் போக்குவரத்து முதலியன துண்டிக்கப்பட்டுவிட்டிருக்கின்றன.

வேதாரண்யம், அதிராமபட்டினம் முதலிய இடங்களில் கடல் கொந்தளித்து, பேரலைகள், அருகிலிருந்த கிராமங்களைத் தாக்கி, கடல் நீரில் மூழ்கடித்திருக்கின்றன.

வீடுகளும், மரங்களும் வேரறுந்து அடியோடு சாய்ந்து கிடக்கும் கொடுமை, உள்ளத்தை நெகிழச் செய்திருக்கிறது.

மன்னுர்குடியில் பாமணி ஆறு, கடந்த இரு நாட்களில் பெய்த மழையினுல் பெருக்கெடுத்து, நகரத்தில் பலத்த பொருட்சேதத்தை விளைவித்திருப்பதாயும், வீடுகள் பலவற்றை நாசமுறச் செய்திருப்பதாயும், கழகத் தோழர் ஒருவர் எழுதியிருக்கிருர்.

திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டத்திலும் புயல் சோக நிகழ்ச்சிகளை விளைவித்திருக்கின்றது. நீர்ப்பாசனத்திற்குப் பயன்பட்டுவரும் பல கண்மாய்கள் உடைந்து வெள்ளப் பெருக்கெடுத்திருக்கின்றன; இதனுல் அருகிலிருந்த ஏராளமான கிராமங்கள் பாதிக்கப்பட்டு, பெருஞ் சேதங்களை அனுபவித்திருக்கின்றன.

தேவகோட்டை, காரைக்குடி, புதுக்கோட்டை நெடுகப் புயல் வீசியதினுலும், பெருமழை பெய்ததினுலும் செய்திப் போக்குவரத்து, மின்சார வினியோகம் முதலியன தடைப்பட்டிருப்பதுடன், பஸ் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டிருக்கிறது. எண்ணற்ற மரங்கள் வீழ்ந்துபட்டதுடன், கால்நடைகளும் சேதமாகியிருக்கின்றன.

விருதுநகரை அடுத்த ஆறு ஒன்றில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினுல் அருகிலிருந்த கிராமங்கள் பாதிக்கப்பட்டதுடன், நகரில் ஒரு பகுதியும் அவதிக்கு ஆளாகியிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி—அறந்தாங்கி மார்க்கத்தில் ஏற்கனவே பாதிக்கப்பட்டதுபோக, இப்போது புதிதாகப் பல இடங்களில் இரயில் பாதைகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாயும் தெரியவருகிறது.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

கைத்தறித் தொழில்:

ரூ. 30 கோடி மூலதனம் தேவையாம்!

கர்னூல், டிச. 4—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 1960—61-ம் ஆண்டில் உற்பத்தி இலட்சிய அளவாக நிர்ணயிக்கப்பட்டுள்ள 300-கோடி கெஜம் கைத்தறித் துணி உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலதனம் ரூ. 30·5 கோடி என்று கணக்கிடப்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது.

ரஷ்ய-தமிழ் அகராதி: சோவியத்தில் தயாராகிறது!

புதுடில்லி, டிச. 5—

சோவியத் ரஷ்யாவின் மொழி தத்துவாசிரியர்கள், ரஷ்ய—தமிழ் அகராதி ஒன்றைத் தயாரித்து வருவதாகத் தெரிகிறது.

இத்துடன் இவர்கள், ரஷ்ய—இந்தி, ரஷ்ய—வங்காளி அகராதி ஒன்றையும் தயாரித்து வருகின்றனராம்.

1857-ம் ஆண்டு இந்தியப் புரட்சியின் நூற்றாண்டு விழா இந்தியாவில் கொண்டாடப்படும்போது, ரஷ்யாவில் கீழ்த்திசை மொழி நிபுணர்கள் செய்துள்ள ஆராய்ச்சிகள் சில வெளியிடப்படும் என்றும், இந்திய சரித்திர, கலாச்சாரம் பற்றி சோவியத் நிபுணர்களின் கருத்துக்கள் அதில் இடம் பெற்றிருக்கும் என்றும் தெரியவருகிறதாம்.

இலங்கையில் 'சுதந்திரத் தமிழகம்'

வெளி நாட்டவரின் உதவி பெற முயற்சிப்பதாகக் கொத்தலாவலை கற்பனை!

ஆளும்கட்சி செயற்குழு முடிவுகள்

கொழும்பு, டிச. 3—

"இலங்கையின் ஆட்சிமொழியாக சிங்களம் மட்டுமே ஆக்கப்பட்டால், வெளிநாட்டவர் உதவியுடன் சுதந்திரத் தமிழ் நாடு அமைத்துக்கொள்வோம் என்று அச்சுறுத்தி, 'சர்க்காரை ஆதரிக்கமாட்டோம்' என்று ஐக்கிய தேசீயக் கட்சியில் உள்ள தமிழ் உறுப்பினர்கள் கூறுவார்களேயானுல், அது முட்டாள்தனமானதாகும்", என்று, பிரதமர் கொத்தலாவலை சீறினுராம்!

"தமிழ் உறுப்பினர்கள் அப்படிச் செய்ய முற்படுவார்களேயானுல், அவர்கள் தேசத்துரோகக் குற்றம் சாட்டப்படுவர்" என்றும் கொத்தலாவலை கொக்கரித்திருக்கிருராம்!

இலங்கையில், 'சுதந்திர தமிழகம் வேண்டும்' என்று கோருவோர் எவரும் இதுவரை, வெளிநாட்டவர் உதவியுடன் அவ்வாறு நாடு அமைக்கப் போவதாகக்கூறியதாகத் தெரியவில்லை.

ஐக்கிய தேசீயக் கட்சியின் செயற்குழுக் கூட்டம், கங்கன்காரா என்பவர் கொண்டுவந்த 'சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி' என்ற தீர்மானம் குறித்து விவாதிப்பதற்காகக் கூடியபோதுதான், கொத்தலாவலை இப்படிக் கூறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

காரசாரமான விவாதத்திற்குப் பின், செயற்குழுவினர் தீர்மானத்தைக் கட்சியின் மாநாடு வரும் பிப்ரவரி 17-ந் தேதி முதல் 19-ந் தேதி வரை நடைபெறும்போது விவாதிக்கலாம் என்று முடிவு செய்தனராம்.

'சிங்களத்திற்கும் —தமிழுக்கும் சமநிலை' என்ற இப்போதைய நடைமுறைக் கொள்கையை சர்க்கார் மாற்றி அமைத்துக் கொள்ளுமானல், தனிச் சுதந்திரம்கொண்ட சிங்கள, தமிழ் நாடுகள் அமைக்க வேண்டும்; அல்லது ஒரு 'பெடரல்' ஆட்சி அமைக்கவேண்டும்—என்ற கட்சியைச் சேர்ந்த தமிழ் உறுப்பினர் (ஆட்சிப் பொறுப்பில் மந்திரியாயிருப்பவர்) கொண்டுவந்துள்ள தீர்மானமும் விவாதிக்கப்படவேண்டியிருக்கிறது.

கட்சி மாநாட்டில் விவாதிப்பதற்கான தீர்மானங்களைப் பொறுக்கி எடுப்பதற்கென, தீர்மானக் குழு ஒன்றையும் செயற்குழுவினர் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.

மொழிச் சிக்கலில் கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்தை வெளிப்படையாகவே தெரிவிக்கலாம் என்ற அனுமதி அளிக்கும் தீர்மானம் ஒன்றையும் செயற்குழு நிறைவேற்றியிருக்கிறது.

கட்சி எடுக்கும் முடிவுகள் எவையாயிருப்பினும் அவற்றைத் தான் நிறைவேற்றி வைப்பதாயும், ஆனல், முடிவுகள் நேர்மையானதாயும் இருக்கவேண்டுவது அவசியம் என்றும், 'சிங்களம் மட்டுமே' என்ற குரல் எழுப்புவோர் வகுப்புவாதிகள் என்றும், கட்சியின் முடிவு, உள்நாட்டில் குழப்பமூட்டுவதாயிருத்தலாகாது என்றும் பிரதமர் கொத்தலாவலை குறிப்பிட்டதாயும் கூறப்படுகிறது.

போர்ச்சுகலுக்கு அமெரிக்கா ஆதரவு

கோவா பற்றிய ரஷ்யக் கருத்துக்குக் கண்டனம்

வாஷிங்டன், டிச. 3—

இந்தியாவிலிருந்து பர்மா சென்றுள்ள ரஷ்யத் தலைவர்கள், கோவா பற்றித் தெரிவித்த கருத்துக்கள், கிழக்கு—மேற்கு நாடுகளிடையே வெறுப்பை வளர்ப்பனவாக உள்ளன என்று அமெரிக்க, போர்ச்சுகல் வெளி விவகார இலாகா மந்திரிகள் கூட்டு அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

பாலோ குன்வா என்ற போர்ச்சுகல் வெளி விவகார மந்திரியும், ஜான் பாஸ்டர் டல்லசும் நீண்ட நேரம் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னர், இந்தக் கூட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளனராம்.

ரஷ்யத் தலைவர்களின் பேச்சுக்களை இன்னதுதான் என்று திட்டவட்டமாகக் குறித்துப் பேசாத அவர்கள், 'ரஷ்யத் தலைவர்களின் சொற்பொழிவுகள், சமாதானம் வளர உதவுவனவாக இல்லை' என்று மட்டும் கூறியிருக்கின்றனர்.

'சுபாஷ் போஸ் உயிருடன் இருக்கிருர்'!

மேற்கு வங்க முன்னுள் மந்திரி கூறுகிருர்

கல்கத்தா, டிச. 4—

சுபாஷ் சந்திரபோஸ் இன்னும் உயிருடன்தான் இருக்கிருர் என்பதை நிரூபிக்க தம்மிடம் புகைப்பட சாட்சியங்கள் இருப்பதாக மேற்கு வங்க மாநில முன்னுள் மந்திரி நிமநேந்திர தத் மஜும்தார் என்பார் தெரிவித்திருக்கிருர்.

'சர்க்கார், சுபாஷ் போஸ் இறந்துபட்டதாக நினைத்துக் கொண்டு காரியமாற்றுவது தவறு' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இறந்துபோனது குறித்த விசாரணை ஒன்று நடத்த இந்திய சர்க்கார் மூவரடங்கிய குழு ஒன்றை நியமித்துள்ளனராம்.

இந்த மூவர் குழுவில், இந்திய தேசிய இராணுவத்தில் சுபாஷ் போசின் நெருங்கிய நண்பராக இருந்த இரயில்வே பார்லிமெண்டரி செயலாளரான ஷா நவாஸ் கான் என்பார் தலைமை வகிப்பார் என்றும் மற்றொரு உறுப்பினராக சுபாஷ் சந்திர போசின் மூத்த சகோதரரான சுரேஷ் சந்திர போஸ் நியமிக்கப்படுவார் என்றும் இன்னொரு உறுப்பினரை மேற்கு வங்க சர்க்கார் நியமிக்கும் என்றும் தெரியவருகிறது.

இந்த மூவர் குழுவை, நேதாஜி இறந்துபட்டார் என்பது குறித்து விசாரணை நடத்த ஜப்பானுக்கு அனுப்புவது என்று இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளனர் என்றும், இது விஷயமாக ஜப்பான் சர்க்காருடன் இந்திய சர்க்கார் கலந்தாலோசித்திருக்கிறது என்றும், ஜப்பான் சர்க்கார், இந்த விஷயத்தில் தங்கள் முழு ஒத்துழைப்பையும் அளிக்கத் தயாராக இருப்பதாக அறிவித்துவிட்டனர் என்றும் பிரதமர் நேரு, மக்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

நம் நாடு
தி.மு.கழகத்தின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 5—12—'55 திங்கள்

நீலிக் கண்ணீர்!

'நீலிக்குக் கண்ணீர் நிமையில்' என்பது தமிழகத்துப் பழமொழிகளுள் ஒன்று.

'இந்தப் பழமொழிக்கு இலக்கணம் எங்கும் தேட வேண்டாம்; இதோ நான் இருக்கிறேன்,' — என்று, கடந்த கிழமை இறுதியில், முதலமைச்சர் காமராசர் சென்னையில் கூறியிருக்கிறார்.

'எளியோரை எழிலோர் அலட்சியம் செய்கின்றனர்.'

'ஏற்றமிகு வாழ்வு பெற்று எழுடுக்கு மாளிகையில் வாழ்வோர், ஏழைகளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.'

'செல்வமும் செல்வாக்கும் படைத்தோர், சீமான்களாக—அரச போகங்களுடன் அரண்மனைகளில் வாழ்கின்றனர்.'

...தப் புரட்சியில் கொண்டு போய்விடும்.'

'எனவே, காலத்தை உணர்வீர்; உச்சியில் இருப்பவர்கள், தீர்ப்பு நாள் வருமுன் காலங் காட்டும் கருத்தை உணர வேண்டும்; வறியோரும், நசுக்கப்பட்டோரும் நம்பிக்கை கொள்ளுமாறு நடந்துகொள்ள வேண்டும்,' என்றெல்லாம், ஏதோ ஏழைகளின் இதயக் குமுறல் கேட்டு இதயம் கசிந்து, இரத்தம் சூடேறி, கண்கள் சிவந்து, கொதிப்படைந்தவர் போல, எழுடுக்கு மாளிகைவாசிகளை—ஏற்றம் கொண்டோரை எச்சரிக்கிறார் காமராசர்.

இப்படி எச்சரிக்கை தருவதின்மூலம், ஏழை எளியோரின் இதயத்தில் காங்கிரசுக்கு...

...வும், ஏற்றங் கொண்டோரைச் சாடுவது போலவும் பாசாங்கு செய்கின்றனர்; 'நீலிக் கண்ணீர்' வடிக்கின்றனர்; 'உங்கள் நிலை கண்டு நெஞ்சம் குமுறுகிறது' என்பதாகக் கூறுகின்றனர்—ஏழைகளிடம்!

'மாடு, மாடு, மாடு' என்று, 'மாடு, தேர்தலில் வெற்றி பெற வேண்டும்' என்பதற்காக, ஜனநாயகத்தைச் சித்திரவதை செய்த காமராசர்தான், 'ஜனநாயகத்தில், பண பலத்தைக் கொண்டு உறுதியான பிடிப்பை பற்றிக்கொண்டிருக்கலாம் என்று எண்ணதீர்,' என்று எச்சரிக்கிறார்.

இந்த எச்சரிக்கைக்கு செவிசாய்க்கவேண்டிய முதல் மனிதர் காமராசரும், அவரது சகாக்களும் தானே! இவர்களே இப்படிப் பேசுவது ஏழைகளை ஏமாற்ற என்பதைத் தவிர வேறெதற்கு?

எல்லா ஏழைகளும், இந்த ஏற்றங்கொண்டோரின் 'நீலிக் கண்ணீர்' கண்டு ஏமாறமாட்டார்கள்!

பரம்பிக்குளம் அணைக்கட்டு

அமைகிறா திரு-கோச்சி சர்க்கார்...

பேச்சுவார்த்தைகள் முறிந்தது ஏன்?

சஞ்சீவி ரெட்டி தரும் விளக்கம்

கர்னூல், டிச. 2—

"எல்லைத் தகராறுகள் குறித்து சென்னை சர்க்காருடன் நாம் ஒரு சுமூகமான முடிவுக்கு வர விழைகிறோம்; அதன் மூலம் இதர மாநிலத்தவருக்கு, சிக்கல்களைப் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்த்துக்கொள்ள முடியும் என்று எடுத்துக் காட்ட விழைகிறோம்.

"எல்லைத் தகராறுகள் பற்றிப் பேசுவதற்கு முற்பட்டது ஒரு சாதகமான நேரமல்ல; இன்னும் சிறிது நாள் கழித்து நாம் பேசத் துவங்கியிருந்தால் சுமுகமான முடிவு ஏற்பட்டிருக்கலாம். நமது சிக்கல்களை சென்னை மந்திரிகள் அனுதாபத்துடன் உணர்ந்திருக்கிறார்கள் என்பதறிய மகிழ்கிறேன். அதே போல நாமும் அவர்கள் சிக்கலை உணர்ந்திருக்கிறோம். வேறெப் போதும் இல்லாத அளவு, சென்னை ஆந்திர மாநிலங்களிடையே இப்போது ஒரு நல்லுறவு வெகுவாக ஏற்பட்டிருக்கிறது. சிறிது நாள் கழித்தால், சிக்கல்கள் சுமூகமாகத் தீர்க்கப் படமுடியும் என்று கருதுகிறேன்,"

என்று, ஆந்திர மாநில உதவி...

"இரு மாநிலங்களின் எல்லைகளையும் மக்கள் சபைதான் இறுதியாக முடிவு செய்ய வேண்டியுள்ளது. அந்த முடிவு குறித்து நாம் என்ன கருதுகிறோம் என்பதறிந்திருந்தால் பிறகு பேச்சுவார்த்தை நடத்துவது உபயோககரமானதாயிருக்க முடியும் என எண்ணுகிறேன்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மதுராந்தகத்தில் சர்க்கரை ஆலை

கூட்டுறவு முறையில் துவக்கப்படுகிறது

இந்தியாவிலேயே முதலாவதாகும்

மதுராந்தகம் வட்டத்தில் சோத்துப்பாக்கம் கிராமத்தில் கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலை ஒன்று நிறுவப்படும்.

இந்தியாவிலேயே கூட்டுறவு முறையில் துவங்கும் சர்க்கரை ஆலை இதுதான் முதல் என்றும், இதன் மூலதனம் ரூ 50 இலட்சம் என்றும் கூறப்படுகிறது.

இந்த ஆலை, 1957-ம் ஆண்டில்...

...டன் முதல், 1000 டன் வரை கரும்பு அரைக்கக்கூடிய இயந்திரசாலையாக அது இருக்கும். வெளி நாட்டிலிருந்து முக்கியமான இயந்திரம் தருவிக்கப்படும்; ஆனாலும், பெரும்பாலான இயந்திரங்கள் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டதாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

இப்போது சென்னை மாநிலத்தில் நான்கு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன.

...மறுப்பு

திருவனந்தபுரம், டிச. 1—

...சென்னை மாநிலத்திலிருந்து ...மைல் தொலைவில் திரு-கொச்சி ...லைக்குள் இரு மாநிலங்களுக் ...ரும் ஓடும் நதி மீது அணை ...டுவதற்கான பரம்பிக்குளம் திட் ...த்திற்கு அனுமதி தர திரு- ...ாச்சி சர்க்கார் அறவே மறுத்து ...ட்டிருக்கிறது.

இத்திட்டத்தால் கோவை வட்டத்தில் பொள்ளாச்சி பகுதி ...மையடையும்.

திரு-கொச்சி மந்திரி சபை வட் ...ரத்தைச் சேர்ந்த ஒருவர், சென் ...க்கு திரு-கொச்சி எல்லைக்குள் ...ணை கட்ட அனுமதி வழங்கினால் ...த மாநிலத்தின் சோலையாறு ...ருஞாலக்குத்து போன்ற சில ...ப்பாசன விசைத்திட்டங்களுக்கு ...திகூலம் ஏற்படும் என்று கூறி ...ராம்.

...ரு எஞ்சின் விலை!

...சித்தரஞ்சன் தொழிற்சாலையில் ...ற்பத்தி செய்யப்படும் இரயில்வே ...ஞ்சின் ஒன்றின் விலை ரூ. 8·1 லட்சம் என்று, 1955—56-ம் ...ண்டில் மதிப்பிடப்படுகிறது ...ன்றும், இத்தொகை மூலதனத் ...ன் மீது வட்டியில்லாமலேயே ...திப்பிடப்பட்டிருக்கிறது என்றும் ...துபோன்ற எஞ்சின்கள் இறக்கு ...தி செய்ய ரூ 5·25 இலட்சம் ...தல் ரூ. 5·50 இலட்சம் வரை ...சலவாகிறது என்றும் இரயில்வே ...ணை அமைச்சர் ஒ. வி. அழகே ...ன் மக்கள் சபையில் தெரிவித் ...ருக்கிறார்.

சித்தரஞ்சன் தொழிற்சாலையின் ...ண்டு உற்பத்தி வரம்பு 300 எஞ் ...ன்கள் என்றும், ஆனால், இப் ...ாது 120 எஞ்சின்கள் மட்டுமே ...ற்பத்தி செய்யப்படுகின்றன என் ...ம், சென்ற ஜூலை திங்கள் முதல் ...சப்டம்பர் திங்கள் வரையிலும் ...ங்களொன்றுக்கு 11 இரயில்வே ...ஞ்சின்கள் வீதம் உற்பத்தி செய் ...ப்பட்டன என்றும் அவர் தகவல் ...ந்திருக்கிறார்.

...இந்தியாவிலிருந்து அரிசி ஏற்றுமதியாகிறது!

1955-ம்ஆண்டின் முதல் ஒன் ...து மாதங்களில் சுமார் 82,232 ...ன் அரிசி இந்தியாவிலிருந்து ...ற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது ...ன்றும், 1954 ஜூலையில் ஏற்று ...திக்காக 2 இலட்சம் டன் ஒதுக் ...ப்பட்டதென்றும், அவ் ...ாறு ஒதுக்கப்பட்ட அளவிலேயே ...ன்னும் ஏற்றுமதிகள் செய்யப் ...ட்டிருக்கின்றன என்றும் மக்கள் ...பையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

...வித்திருக்கிறார்.

தீண்டாமை ஒழிப்பு

சென்னை சர்க்கார் நடவடிக்கைகள்

சென்னை, டிச. 2—

தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன், அரிசன மக்களுடன் சேர்ந்து அடுத்தடுத்து சாதி இந்துக்களைக் குடியமைத்து வாழச் செய்ய வீடுகள் கட்டிக் கொடுத்துப் புதிய காலனிகளை ஏற்படுத்துவது என்று சென்னை சர்க்கார திட்டம் தீட்டியுள்ளனர் என்று தெரிகிறது.

இத்திட்டப்படி ஆண்டொன்றுக்கு, 5,000 வீடுகள் வீதம் 5-ஆண்டுகளில் 25,000 வீடுகள் கட்டப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது

இத்திட்டத்திற்காகவும், அரிசன மக்களின் வாழ்க்கை நிலையை அபிவிருத்தி செய்வதற்கான வேறு சில சிறிய திட்டங்களுக்காகவும சென்னை சர்க்கார் மொத்தமாக ரூ. 1,83,90,000 மானியமாகத் தருவதெனவும் உத்தேசித்துள்ளனராம்.

இந்த வகைக் காலனிகளில் கட்டப்படும் ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 450 தான் செலவாகும் என்றும், ஒவ்வொரு காலனியிலும் 10 சத விகித வீடுகள் அரிசன மக்கள் அல்லாதாருக்குத் தரப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதைத் தவிர, ஆண்டொன்றுக்கு 400 வீடுகள் வீதம் தாழ்த்தப்பட்டப் பழங்குடி மக்களுக்கென 2000 வீடுகளும், ஆண்டொன்றுக்கு 200 வீடுகள் வீதம் முன்னாள் குற்ற பரம்பரையினருக்கென 1,000 வீடுகளும் கட்டித் தருவதெனவும் சர்க்கார் உத்தேசம் கொண்டுள்ளனராம்.

பள்ளி ஆண்டுத் துவக்கம்

சென்னை, டிச. 2—

பள்ளிக்கூடங்களின் ஆரம்ப மாதமான ஜூன் மாதத்திற்குப் பதிலாக, இனிமேல் டிசம்பர் மாதத்தைக் கொள்வதென்ற யோசனை குறித்து சர்க்கார் இது வரையிலும் எவ்வித முடிவிற்கும் வரவில்லையென்று கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

இந்த மாறுதலை பெரும்பான்மையினரான மக்கள் ஆதரிக்கவில்லையென்றும், அவர்களெல்லாம், மார்ச்—எப்ரல் மாதங்களில் பள்ளி ஆண்டுப் பரீட்சைகளை நடத்துவதையே விரும்புகின்றனர் என்றும் கூறியிருக்கிறார்.

குமரி முனையை இணைக்கும் இரயில் பாதை!

சென்னை, டிச. 2—

திருநெல்வேலியுடனும் — திருவனந்தபுரத்துடனும் குமரி முனையை இணைத்து, 'மீட்டர் கேஜ்' இரயில் வண்டித் தொடர் ஏற்படுத்துவது சம்பந்தப்பட்ட 'சர்வே' வேலைகள் நடத்துவதற்கு இரயில்வே அதிகாரிகள் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்களாம்.

இந்த வேலைக்காக இரயில்வே குழு மொத்தம் ரூ. 54,000 அனுமதித்துள்ளனர் என்றும், 'மீட்டர் கேஜ்' போடவேண்டிய தூரம் 105 மைல்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளதாயும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரயில் பாதை அமைப்பதினால் ஏராளமான மக்களின் பிரயாண வசதி மேலும் அதிகரிக்கும் என்றும், அத்துடன், இப்பகுதிகளில் உற்பத்தியாகின்ற சாமான்கள் கொச்சித் துறைமுகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுவதற்கு உதவியாக இருக்கும் என்றும் இரயில்வே அதிகாரிகள் கருதுகின்றனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

உஸ்பெகிஸ்தான்

கலாச்சாரத் தூதுக்குழு

டிச. 15-ல் இந்தியா வருகிறது

இந்திய சர்க்காரின் அழைப்பிற்கிணங்க, ரஷ்யாவைச் சேர்ந்த உஸ்பெகிஸ்தானிலிருந்து பிரபல கிராமிய நடனக்காரர்கள் அடங்கிய கலாச்சாரத் தூதுக் குழு ஒன்று டிச. 15-ந் தேதியன்று இந்தியாவுக்கு வருகிறது; இந்தியாவில் 5 வார காலம் அக்குழுவினர் சுற்றுப்பயணம் செய்வார்கள்

13 பேரடங்கிய அந்தக் கிராமிய நடனக் குழுவினர், டில்லி, லக்னோ, சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் நிகழ்ச்சிளை நடத்திக் காண்பிப்பர்.

'அம்தம்பாது, ஏழைகள்—ஏதுமில்லாதோர், கொட்டும் வறுமைக்கிடையே சிக்கித் தவிக்கின்றனர்.'

'எழுடுக்கு மாளிகையில் வாழும் ஏற்றம் கொண்டோர், தங்களைச் சுற்றி சகதியில் புரளும் மனிதர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை சிந்தித்துக் கூடப் பார்ப்பதில்லை.'

என்றெல்லாம் காமராசர் பேசியிருக்கிறார்.

பேசியிருப்பது காமராசர் தான் என்பதை அறியும்போது 'நீலிக்குக் கண்ணீர்........' பழமொழிதான் நமக்கு நினைவுக்கு வருகிறது.

ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கும் காமராசர், ஏழைகளைப் பற்றிப் பேசியிருப்பதே ஆச்சரியத்திற்குரியது. ஏனெனில் ஆட்சிப்பீடம் அமைத்திருப்பது காங்கிரஸ்; அந்தக் காங்கிரஸ், ஏழைகளை மறந்து எத்தனையோ ஆண்டுகளாயிற்று என்பது மட்டுமல்ல—ஏழைகளை ஏமாற்றி ஏய்த்துப் பிழைப்போர், சுரண்டிக் கொழுப்போர், செல்வச் சீமான்கள், குறுநில மன்னர்கள், ஏழை எளியோரின் பரம வைரிகள் ஆகியோரது பாதுகாப்புச் சங்கமாகவும் விளங்கிவருகிறது.

அத்தகு காங்கிரஸ் ஆட்சியின் முதல்வர் காமராசர், ஏழைகளைப் பற்றிப் பேசியிருப்பது ஆச்சரியத்திற்குரியதுதான் என்றே தீவிர அரசியல்வாதிகள் கருதுவர்.

ஏழைகளைப் பற்றிப் பேசியிருக்கிறார் என்பது மட்டுமின்றி, ஏற்றங்கொண்டோரை எச்சரிப்பது போலவும் பேசியிருக்கிறார்.

'வறியோரையும், நசுங்குண்டு சீரழிவோரையும் அலட்சியப் படுத்துவது ஆபத்து.'

'செல்வமும் — செல்வாக்கும், நிரந்தரமாக அதிகாரத்தையும்—அந்தஸ்தையும் தரும் என்று எண்ணாதீர்.'

'பண பலத்தினால், ஜனநாயக ஏற்பாட்டில் உறுதியான பிடிப்பைப் பற்றிநிருக்கலாம் என்று செல்வந்தர்கள் எண்ணுவார்களேயானால், அது, எதிர்பாராதவகையில், எவராலும் கட்டுப்படுத்த இயலாத ஒரு பெரும் இரத்...

...போதும்!

'ஏழை ஏன்—பணக்காரன் ஏன்? எளியோன் ஏன்—ஏற்றம் கொண்டவன் ஏன்? உழைப்பவன் ஏன்—உல்லாசி ஏன்? பாட்டாளி ஏன்—பாடுபடாதவன் ஏன்? தொழிலாளி ஏன்—முதலாளி ஏன்? விவசாயி ஏன்—நிலப் பிரபு ஏன்? ஏன் இந்த ஏற்றங்கள்?'— என்ற கேள்விக்கு, காங்கிரஸ் ஒரு காலத்தில் விடையளிக்க நினைத்ததுண்டு; இன்றல்ல— 'தாயின் மணிக் கொடி' பட்டொளி வீசிப் பாரா முற்படுமுன்!

'சுதந்திரம்' கிடைத்து விட்டது என்று கூறப்பட்ட நாளிலேயே, ஏழையை, காங்கிரஸ் மறந்துவிட்டது.

ஏழையை வதைத்து வாட்டி, அவன் வாழ்வைச் சூறையாடுவோரின் பயிற்சி முகாமாகக் காங்கிரஸ் மாறி எட்டாண்டுகளுக்கும் மேலாகிவிட்டது.

கடந்த எட்டாண்டு கால 'சுயராஜ்ய ஆட்சி,' ஏழைகளுக்கு இந்தப் பாடத்தை நன்கு கற்றுத்தந்திருக்கிறது என்றே கூறவேண்டும்.

ஏழை—எளியவன், பாட்டாளி—தொழிலாளி, நடுத்தர மக்கள் வாழ்வில் 'சுதந்திரம்' எந்தச் சுகத்தையும் ஊட்டிவிடவில்லை என்பதை மக்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள்.

இந்த உண்மையை உணர்ந்துள்ளதால்தான் காங்கிரசார் ஆவடியில், 'மாதிரி சோஷலிசம்' பேசினர். எங்காவது ஏழையைச் சந்திக்க நேர்ந்தால் 'எனதுநோமும் நினைப்பும்-செயலும் உன் வாழ்வைச் செம்மையுறச் செய்யத்தான்; அதிகாரமும்—ஆட்சியும் உனக்கு துணை நிற்கத்தான்,' என்று, செவி இனிக்கப் பேசுவது காங்கிரஸ் பெருந்தலைகளின் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன, இப்போது; அந்த வரிசையில் தான் காமராசரும் நிற்கிறார்.

ஏழைகளை மறந்தனர் என்பது மட்டுமல்ல—ஏழை எளியோருக்குப் பெரும் துரோகம் இழைத்துள்ளனர், காங்கிரசார் —என்பதை, மக்களில் தெளிவு பெற்றோர் மட்டுமின்றி சாதாரணமானவர்களும் உணரத் தலைப்பட்டிருப்பதால், ஏழை மீது இரங்குவது போல...

சேலம் மாவட்டத்தில் அண்ணு

சுற்றுப் பயண நிகழ்ச்சிகள்

எடப்பாடி

20—11—55ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அண்ணு அவர்கள் கலந்துகொண்டு இரவு சேலத்தில் தங்கியிருந்து, மறுநாள் மாலை 5 மணிக்கு எடப்பாடி வந்து சேர்ந்தார்கள். எடப்பாடியில் தோழர் இரா. தாண்டவன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத் துவக்கத்தில் தோழர் தில்லை-வில்லாளன் சிறிதுநேரம் சொற்பொழிவாற்றியபின், அண்ணு அவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினை குறித்து விளக்கவுரையாற்றினுர்.

அண்ணு அவர்களுக்குப் பல கிளைக் கழகங்களின் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறித் துணிகளும் அணிவிக்கப்பட்டன.

திருச்செங்கோடு

இரவு 8½ மணிக்கு, அண்ணு அவர்கள் திருச்செங்கோடு சென்ருர்கள் திருச்செங்கோடு கைலாசம் பாளையத்தில் தோழர் நடேசன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அண்ணு அவர்களுக்குப் பல கிளைக் கழகங்கள், தனிப்பட்டவர்கள் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டு வரவேற்பிதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன.

அண்ணு அவர்கள் தி. மு. கழக வளர்ச்சி, தொண்டு, எதிர்காலத் திட்டம் ஆகியவை பற்றி விரிவாகப் பேசினுர்.

மேட்டூர்

இரவு 1 மணிக்கு, அண்ணு அவர்கள் மேட்டூர் நாடகத்திற்குச் சென்று தலைமை வகித்து, நாடகத்தையும், நடித்தவர்களையும் பாராட்டிப் பேசிய பின்னர் இரவு மேட்டூரில் தங்கினுர்கள்.

செல்லப்பம்பட்டி

22—11—55 காலை 10 மணிக்கு செல்லப்பம்பட்டி பஞ்சாயத்துக் குழு அளித்த வரவேற்பில் கலந்துகொண்டார்கள் வரவேற்பு ஏற்பாடுகள் செல்லப்பம்பட்டி தி. மு. க.-வினரால் பிரம்மாண்டமான முறையில் செய்யப்பட்டிருந்தன.

அண்ணு அவர்களும், தோழர் தில்லை-வில்லாளனும் சற்று நேரம் கூட்டத்தில் பேசிய பின்னர், புறப்பட்டு, வழிநெடுக சிற்றூர்களில் நிறுத்திக் கொடுக்கப்பட்ட வரவேற்புகளை ஏற்றுக்கொண்டு நடுப்பகலில் நாமக்கல் வந்து சேர்ந்தனர்.

நாமக்கல் :

நாமக்கல் நகரம் வளைவுகளாலும், தோரணங்களினுலும் மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அன்று இரவு 9 மணிக்கு தோழர் பெருமான் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அண்ணு அவர்களுக்குப் பல கிளைக் கழகங்களின் சார்பாக மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிக்கப்பட்டன.

அண்ணு அவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினை குறித்துப் பேசி முடித்துக்கொண்டு, இரவு 'வீரவாலி' நாடகத்துக்குத் தலைமை வகித்து நாடகத்தைப் பாராட்டிப் பேசினுர்கள்.

காவேட்டிப்பட்டி வரவேற்பு :

பின்னர், காவேட்டிப்பட்டி சென்று பஞ்சாயத்துக் குழு வரவேற்பைப் பெற்றுக்கொண்டு பொத்தனூர் அடைந்தனர்.

பொத்தனூர்

பொத்தனூர் தி. மு. கழக அலுவலகத்தில் அண்ணு அவர்கட்கு தேநீர் விருந்தும் வரவேற்பும் அளிக்கப்பட்டது. அண்ணு அவர்களின் வருகையையொட்டி ஊர் முழுவதும் கொடிகளாலும், தோரணங்களாலும், வளைவு தட்டிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஏராளமான கழகத் தோழர்கள் அண்ணு அவர்களை ஆர்வமுடன் வரவேற்றனர்.

பாண்டமங்கலம்

தேநீர் விருந்திற்குப் பின்னர், அண்ணு அவர்கள் பாண்டமங்கலம் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டார். பொதுக் கூட்டத்திற்கு தோழர் வை. வீராண்டி தலைமை வகித்தார், தோழர் தில்லை-வில்லாளன் சிறிது நேரம் பேசியபின், அண்ணு அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசுகையில், "பொருளாதாரத்தில் வடநாடு உயர்ந்து, தென்னுடு தேய்ந்து வருவதை. குறிப்பிட்டு, தென்னுட்டில் தண்ணீர் இல்லாத சிற்றூர்கள் எல்லாம் 'சமுத்திரம்' என்ற பெயரால் அழைக்கப்படுவதையும், சமுத்திரம் போன்ற பக்ரா-நங்கல் அணைத் திட்டத்தை 'பக்ரா-நங்கல் கால்வாய்' என்ற பெயரால் அழைக்கப்படுவதையும் தென்னுடு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டதையும் குறிப்பிட்டார்.

அடுத்து இப்பகுதியின் முக்கிய தொழிலாகிய வெற்றிலைக் கொடிக்கால் ஒருவித நோயால் பாதிக்கப்பட்டு, அதனுல் மக்கள்படும் அவ

அடுத்த சட்ட சபைக் கூட்டம்

சென்னை, டிச. 3—

வருகிற ஆண்டு ஜனவரி திங்கள் பொங்கல் பண்டிகை முடிவுற்ற பின், மீண்டும் சென்னை சட்ட சபை கூட இருக்கிறது. அது போது, மாநிலக் குழுவினருடைய சிபாரிசுகளில் ஒப்புக் கொள்ளப்பட்ட சிபாரிசுகளடங்கிய இந்திய சர்க்காரின் நகல் மசோதா பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிகிறது.

இயை விளக்கி அம்மக்களின் வாழ்வு மலர அரசியலார் இரண்டொரு லட்சம் ரூபாய் செலவு செய்து ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று கூறினுர்.

அண்ணு அவர்களுக்கு, பொத்தனூர் திராவிட வெற்றிலைத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில், வெற்றிலை மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்பிதழ் ஒன்று வாசித்தளிக்கப்பட்டது. பொத்தனூர் தி. மு. கழக சார்பில் கைத்தறி ஆடையும், பாண்டமங்கலம் தி. மு. கழக சார்பில் மலர்மாலையும், வரவேற்பிதழ் ஒன்றும் வாசித்தளிக்கப்பட்டது. சுற்றுவட்டாரக் கிளைகளின் சார்பாக ஏராளமான மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. வேலூர், வெங்கரை,

(தொடர்ச்சி 4-ம் கலம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட மாணவர்களுக்கு வேண்டுகோள்

திராவிட மாணவர்களே !

அண்மையில் சென்னையில் நடைபெற்ற திராவிட மாணவர் முன்னேற்றக் கழக 2-வது மாநில மாநாடு, உங்கள் ஆர்வத்திற்கும், ஆற்றலுக்கும் இலக்கியம் சமைத்துவிட்டது. திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் குழு உங்கள் உற்சாகத்தையும் உணர்வையும் பாராட்டுகிறது—வாழ்த்துகிறது.

சென்னை மாநாட்டில் நாம் தீர்மானித்ததற்கிணங்க திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைகள் நாடெங்கும் தழைத்திட பணி புரிய வேண்டிய மகத்தான பொறுப்பு உங்கள் முன்னே உள்ளது.

1. எங்கெங்கு மாணவர் கழகக் கிளைகள் இல்லையோ, அங்கெல்லாம் உடனே நிறுவுங்கள்.
2. திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளை ஒவ்வொன்றிற்கும் குறைந்தது 25 உறுப்பினர்களாவது இருக்கவேண்டும்.
3. அதிலிருந்து ஒரு செயலாளர், ஒரு துணைச் செயலாளர், ஒரு பொருளாளர், ஐந்து பேருக்குக் குறையாத செயற்குழு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
4. தனியாக இயங்கமுடியாத நிலையுள்ள இடங்களில், பக்கத்துக் கிளையில் சேர்ந்து கொள்ளலாம். வசதிக்காகப் பல கல்வி நிலையங்கள் ஒரே கழகமாகவும் அமையலாம்—(உதாரணமாக, 2 கல்லூரிகள், 4 உயர்நிலைப் பள்ளிகள் உள்ள ஒரு நகரில் எல்லாம் சேர்ந்து ஒரே கிளையாகவும் அமைக்கலாம்; அல்லது தனித்தனியாக 6 கிளைகளாகவும் அமைக்கலாம்; அல்லது தனியாக இயங்கமுடியாத உறுப்பினர்கள் உள்ள இடங்கள், பக்கத்துக் கிளையின் அங்கமாக அமையலாம்—மேற்கூறிய முறையில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைகள் விரைவில் நிறுவப்பட வேண்டும்.
5. ஏற்கனவே கழகங்கள் நிறுவப்பட்டுள்ள கிளைகளின் செயலாளர்கள், தங்கள் கிளையின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர் மற்ற விபரங்களையும், தலைமை நிலையத்திற்குத் தெரியப்படுத்திப் பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டப்படுகிருர்கள்.
6. புதிய கிளைகள் அமைப்போரும் கிளை அமைப்பு பற்றிய சேதியை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்திற்கும், செய்தித் தாள்களுக்கும் அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகிருர்கள்.

ஜனவரி முதல் வாரத்தில் திருச்சியில் அல்லது அண்ணுமலை நகரில், திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் குழு கூடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த அமைப்புக் குழு, உறுப்பினர் சேர்க்கும் முறை, கழக சட்ட திட்டம், மாவட்டக் கழகம் ஆகியவை குறித்து முடிவுகள் எடுக்கும். அதற்குள் பல இடங்களிலும் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைகளை நிறுவுங்கள்—என்று, அமைப்புக் குழுவின் சார்பில் ஆர்வம் படைத்த எல்லா திராவிட மாணவர்களையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தலைமை நிலயம்,
'அறிவகம்',
இராயபுரம்,
சென்னை, 3-12-55

டி. கே. பொன்னுவேலு,
அமைப்பாளர்,
திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

'பசில் அலியின் நேர்மையை பணிக்கர் பின்பற்ருதது ஏன்?'

சென்னை மேல் சபையில் வி. வி. இராமசாமி

"மாநிலப் புனரமைப்புக் குழுவின் அறிக்கையைப் படித்துப் பார்க்கும்போது பசில் அலி, தாம் பீகார் மாகாணத்தைச் சேர்ந்தவராகையால் தாம் அதில் சம்பந்தப்படவில்லை என்று தாராளமாகச் சொல்லியிருக்கிருர். அதேபோல் பணிக்கர் அவர்களும் மத்திய திருவாங்கூரைச் சேர்ந்தவராகவிருப்பதால் தாமும் அது சம்பந்தப்பட்டவரையில் கலந்துகொள்ளவில்லை—யோசனை சொல்லவில்லை என்று சொல்லியிருந்தால் எவ்வளவோ நேர்மையாக இருந்திருக்கும்.

"சென்னையைத் தவிர, இதர மாநிலங்கள் சம்பந்தப்பட்ட வரையில், அறிக்கையின் வாக்கியங்களைப் பார்த்தால், 'இந்த மாவட்டம் இந்த மாநிலத்தோடு சேரவேண்டும்,' 'இந்த மாவட்டம் இங்கே இருக்க வேண்டும்'—என்று சொல்லியிருக்கிருர்கள். ஆனல், கேரள—கர்நாடக மாநிலங்களைப் பற்றிச் சொல்லும்போது, 'சிபாரிசா'க—மெதுவாக—இனிமையாக சொல்லுகிருர்கள். ஆனல், நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில், நீதிபதியின் தீர்ப்புப்போல், கடுமையான—கட்டாயமான வார்த்தைகளை உபயோகித்திருக்கிருர்கள். இதிலிருந்து அவர்கள் முன்கூட்டியே யோசனை செய்து இம்மாதிரி செய்திருக்கிருர்கள் என்றுதான் தெரிகிறது.

"ஆந்திர மாநிலம் ஏற்கனவே நம்மை விட்டுப் பிரிந்துவிட்டது; இனி கேரளமும், கர்நாடகமும் பிரியப்போகிறது; நமது சகோதரர்கள் நம்மை விட்டுப் பிரிந்தபோதிலும், தென்னகத்து மாநிலங்களைப் பற்றிய பொதுவான பிரச்சினைகளில் நாம் ஒன்றுகூடிப் பேசி காரியங்களை முடிக்க வேண்டும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்திக்கொண்டால், எல்லாவிதமான பிரச்சினைகளும் சுமூகமாகத் தீர்ந்துவிடும்."

—என்று 24—11—55ல் நடைபெற்ற சென்னை சட்டசபைக் கூட்டத்தில், மாநில புனரமைப்புக்குழு அறிக்கை குறித்த விவாதத்தின் போது, தோழர் வி. வி. இராமசாமி அவர்கள் கூறியிருக்கிருர்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

"'இங்கு ஒரு தட்சிணப்பிரதேச மாநிலம் இருக்கக் கூடாதா?' என்ற கருத்து வெளிப்படையாகச் சொல்லப்பட்டது; இந்திய அரசாங்கத்திடமும் சொல்லப்பட்டது. 'அதற்கு இடங்கொடுக்கவில்லை' என்று அமைச்சர் கூறியிருக்கிருர். திரு-கொச்சி மாநிலத்தவரும் தங்களுக்குத் தனி மாநிலம் வேண்டுமே தவிர, சென்னையுடன் இணையத் தேவையில்லை—என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டதினுல் 'தட்சிணப் பிரதேசம்' என்ற பேச்சே இல்லாமல் போய்விட்டது பற்றி நாம் மகிழ்ச்சி அடைகிறேம். ஆனல், செல்வாக்குள்ள சில இடங்களில், இப்படி ஒருபெரிய மாநிலம் அமைத்தால், நம்முடைய பகுதிக்கு மரியாதையும், பொறுப்பும், அதிகாரமும் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. ஆனல், மொழிவாரி அடிப்படையாக மாநிலங்கள் அமைக்கப்பட்ட பிறகு தமிழ், கேரள, கர்நாடக, ஆந்திர மாநிலங்களின் மந்திரி சபையினர், வேண்டிய நேரத்தில் ஒன்றுகூடி, தெற்குப் பிராந்தியத்திற்குத் தேவையான காரியங்களைச் சாதித்துக்கொள்ள முடியாதா என்பதை யோசனை செய்ய வேண்டும்.

"சில நாட்களுக்கு முன்பு, அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் 'இந்தி மொழி பேசாத பகுதியினர்கள் எல்லோரும் ஒன்றுகூடி இந்தி மொழி பற்றி ஒரு முடிவுக்கு வரலாம்' என்று கூறியுள்ளார். அதுபோல் சிக்கல்கள் வரும்போது—அதாவது வடக்கேயுள்ள உத்தரப்பிரதேசத்தில் உள்ள அதிகப்படியான மக்கள் ஆதிக்கம் செலுத்துவார்களானுல்—ஆதிக்கம் செலுத்திக்கொண்டுதான் இருக்கிருர்கள்—அம்மாதிரி நெருக்கடி வந்தால்—தென் பகுதியில் உள்ள நாம் தென்னுட்டின் மீது பற்று உள்ளவர்களாக இருந்தால், எல்லோரும் ஒன்று சேர்ந்து காரியத்தை ஏக மனதாக முடித்துக்கொள்ள வேண்டும். அந்தச் சூழ்நிலை ஏற்படுவதற்கு இந்த விவாதம் நடைபெறும் போது, வீணுன குரோதத்தை வளர்க்காமல் இருப்பது தான் நல்லது.

"சென்னை நகரத்தைப்பொறுத்த வரையிலும் முன்பு ஆந்திர நாடு பிரியும்போது, 'ஆந்திர நாட்டினர் சென்னை நகரத்தைத் தங்களுடைய நாட்டோடு சேர்ந்ததாகக் கருதக் கூடாது' என்று திட்டவட்டமாகச் சொல்லப்பட்டுவிட்டது. ஆனல் இப்பொழுது குழுவினுடைய அறிக்கை பார்த்த பிறகும் மீண்டும் ஆந்திரர்களில் சிலர் சென்னை நகரத்தை ஒரு தனி மாநிலமாக்கவேண்டுமென்று கூறுவதாகத் தெரிகிறது. அது பெரிய தவருகும். அம்மாதிரி அவர்கள் சொல்வதற்கு இடங்கொடுக்கக் கூடாது. எக்காரணத்தைக்

(4-ம் பக்கம் பார்க்க)

(3 ம் கலத்தின் தொடர்ச்சி.)

கொளக்காட்டுப்புதூர் முதலிய கிளைகள் மாநில மாநாட்டிற்கு நிதியளித்தன.

நீர்முள்ளிக்குட்டை :

மறுநாள் மாலை 4 மணிக்கு நீர்முள்ளிக்குட்டையில் தோழர் திருவேங்கிடாதன் தலைமையில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில் அண்ணு அவர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினுர்.

ஆத்தூர் :

மாலை 6 மணிக்கு, ஆத்தூர் உயர்நிலைப் பள்ளி மாணவர்களிடையே சொற்பொழிவாற்றினுர்.

மல்லியக்கரை :

பின்னர், அண்ணு அவர்கள் மல்லியக்கரைப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

ஆனையாம்பட்டி :

இரவு 8½ மணிக்கு, ஆனையாம்பட்டி பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. பஞ்சாயத்துக் குழு சார்பில் அண்ணு அவர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

மேடை அலங்காரமும், மக்கள் திரளும் பாராட்டத் தக்கதாயிருந்தது.

அண்ணு அவர்களும் தில்லை-வில்லாளன் அவர்களும் சொற்பொழிவாற்றிய பின் இரவு தோழர் கே. ஆர். ஆர். நாடகத்துக்குச் சென்றனர்.

அத்துடன் அண்ணு அவர்களின் சேலம் மாவட்ட சுற்றுப் பயண நிகழ்ச்சிகள் முடிவு பெற்றன.

அண்ணு சுற்றுப் பயணம் முடியும்வரை சேலம் மாவட்டச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம், துணைச் செயலாளர் ப. இராமலிங்கம், பொருளாளர் பி. எம். குப்புசாமி ஆகியோர் உடனிருந்து உபசரித்து, நன்றி கூறி வழியனுப்பினர்.

எல்லா இடங்களிலும் அண்ணு அவர்களிடம் மாநில மாநாட்டு நிதித் தொகை கொடுக்கப்பட்டது.

மாநிலப் புது அமைப்புக்கு வேட்டு?

மத்திய மந்திரிகள் சிலரும் உடந்தையா?

பிரதமர் நேருவின் அறிவிப்பு

புதுடில்லி, டிச. 5—

மாநிலப் புனரமைப்புக் குழுவினர் செய்திருந்த சிபாரிசுகளை யொட்டி நாட்டின் பல பாகங்களிலும் மூண்டெழுந்துள்ள கிளர்ச்சிகளையும், ஆர்ப்பாட்டங்களையும் கருத்தில்கொண்டு, அச்சிபாரிசினை அமுல் நடத்தும் சீரமைப்பு வேலைகளை இன்னும் 10 அல்லது 15 ஆண்டுக் காலத்திற்கு ஒத்திப்போடலாம் என்று இங்குள்ள சில முக்கியக் காங்கிரஸ் தலைவர்கள் எல்லாம் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்றும், அந்த 'முக்கியத் தலைவர்கள்' பட்டியலில், சில மந்திரிகளும் இடம் பெற்றுள்ளனர் என்றும் பத்திரிகைக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

இந்த முயற்சிகளெல்லாம் ஒருபுறம் தீவிரமாக நடைபெற்று வந்தாலும்கூட பிரதமர் நேரு, இதனை மேலும் ஒத்திப்போடுவதென்பது உசிதமான காரியமல்ல என்று 'கண்டிப்'புடன் இருந்து வருகிறார் என்றும் தெரியவருகிறது.

அவர், வருகிற 1957-ம் ஆண்டுத் துவக்கத்தில் நடைபெற இருக்கிற பொதுத் தேர்தலுக்கு முன்னரேயே மாநிலங்களைப் புனரமைப்புச் செய்யும் வேலைகள் அனைத்தையும் பூர்த்தி செய்தாக வேண்டும் என்று திடமான கருத்தினைக் கொண்டுள்ளார் என்றும் அக்குறிப்பில் காணப்படுகிறது.

சில அமைச்சர்கள் உட்பட காங்கிரஸ் தலைவர்களின் போக்கும், பிரதமர் நேருவின் கருத்தும் இப்படி இருக்கும் போது, மற்றும் சில 'பொறுப்புமிக்க' அதிகாரிகள், "குழுவின் அறிக்கையைக் கைவிடுவதாக இருந்தால், 'இன்றைய நாடாளும் சர்க்காருக்குப் பலம் கிடையாது; நிலையான ஒரு கொள்கை கிடையாது'— என்று, மக்கள் சந்தேகங் கொள்ள ஆரம்பித்துவிடுவர்; எனவே, அறிக்கை மீது நடவடிக்கை எடுப்பதைக் கைவிடக்கூடாது" என்று கூறியிருக்கின்றனராம்.

'சிபாரிசுகளின் விளைவாகத் தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் கருத்தில் கொண்டு, திட்டத்தைக் கைவிட்டால், அதனால், இப்போதிருக்கிற நிலையைவிட மிகப் பிரம்மாண்டமான அளவில் புதிய தகராறுகள் கிளம்பும் என்பதையும் கவனித்தாக வேண்டும்' என்றும் அவ்வதிகாரிகள் கூறியிருக்கின்றனராம்.

காமராசர் செய்யப்போவதென்ன?

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

முத்துப்பேட்டை, அறந்தாங்கி வட்டங்களில் பல தென்னந் தோப்புகள் புயலால் அழிந்துபட்டதினால் அந்த வட்ட மக்களின் பொருளாதாரம் தட்டுக்கெட்டுவிட்டது என்றும், சேதம் இவ்வளவு என்று சொல்ல முடியாதென்றும் கூறப்படுகிறது.

வேதாரண்யத்தில், கஸ்தூரிபா கன்யா குருகுலத்தின் கட்டிடங்கள் விழ்ந்துபட்டதாயும், அங்கிருந்த ஏராளமான கால்நடைகள் கொல்லப்பட்டதாயும் தகவல் கிடைத்திருக்கிறது.

மொத்தத்தில் கடந்த 1952-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஏற்பட்ட புயல் கொடுமைகளைக் காட்டிலும், இந்த ஆண்டு புயல், வெள்ளக்கொடுமை இந்தப் பகுதிகளில் மிக அதிகம் என்று கூறப்படுகிறது.

தேவையான நிவாரண உதவிகளைச் செய்யுமாறு, மாவட்ட நிர்வாக அதிகாரிகள் தந்தி மூலம் சர்க்காரால் உத்தரவிடப்பட்டிருக்கின்றனராம்.

'ரெவினியூ போர்டு' உறுப்பினரான எம். வி. சுப்பிரமணியம் என்ற ஐ. சி. எஸ். அதிகாரி புயலினால் விளைந்த சேதங்களைக் கணக்கிட்டுக்கூற நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முதன் மந்திரி காமராசர் இன்று இரயில் மூலம் புறப்பட்டு, புயலில் சிக்கிய பகுதிகளைப் பார்வையிடச் செல்கிறார் என்று தெரியவருகிறது.

புயல் கொடுமைக்கு ஆளாகி, வாழ்விழந்து தவிக்கும் மக்கள் மீண்டும் வாழ்வு பெற காமராசர் என்ன செய்யப் போகிறார் என்றே நாட்டவர் கூர்ந்து கவனித்தவண்ணமுள்ளனர்.

வி. வி. இராமசாமி பேச்சு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டும் சென்னை நகரம் தனி மாநிலம் ஆக்கப்படக் கூடாது. சென்னை நகரம் என்றைக்கும் தமிழ் நாட்டோடு சேர்ந்தது தான்—தமிழ் நாட்டுத் தலை நகரம் தான்.

"மாநிலச் சீரமைப்புக்குழுவினர், மொழியையே அடிப்படையாக வைத்துக்கொள்ளக் கூடாதென்று ஒரு இடத்தில் சொல்லிவிட்டு; அவர்களுக்குப் பிரியம் இல்லாத இடத்தில் மொழியை அடிப்படையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

"மாவட்டவாரியாகப் பிரிக்க வேண்டும் என்று ஒரு இடத்தில் சொல்லிவிட்டு, பிறகு தங்களுக்குக் கருத்துத் தோன்றுமிடத்தில் தாலுகாவாரியாகவும் பிரிக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். மற்றொரு இடத்தில் நிர்வாக வசதியைப் பார்க்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்களே தாங்கள் சொல்லும் திட்டப்படி நடக்க இயலாமலிருக்கின்றனர் என்று நமக்கு நன்றாகத் தெரிகிறது.

"சென்னை மாநிலத்தில் இருப்பவர்கள் யாரும், ஒருக்காலும் திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகளான 9 தாலுகாக்களைப் பற்றிய பிரச்னையை எழுப்பவில்லை. அங்கே வாழும் தமிழ் மக்கள்தான், 'தாங்கள் கேரள மாநிலத்தில் இருப்பது சரியல்ல; தமிழ் நாட்டோடு இணைய வேண்டும்' என்று கிளர்ச்சி செய்து, அதற்காகப் பல தொல்லைகளையும் அனுபவித்தார்கள். ஆகையால்தான், அவர்களை 'வருக' என்று சொல்லுகிறோம். அவர்களே, 'தமிழ் மாநிலத்துடன் சேர வேண்டும்' என்று கருத்து தெரிவிக்கும்போது, அவர்களை அங்கேயே இருக்க வேண்டும் என்று நாம் சொல்வதற்கில்லை.

"உயர் நீதிமன்ற நீதிபதிகள் மூன்றில் ஒரு பகுதியினர் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று குழு சிபாரிசு கூறுகிறது; இந்தப் போக்குமிக்க ஆபத்தானது; அதற்கு நாம் உடன்படவே கூடாது.

"ஒவ்வொரு அதிகாரமும் டில்லிக்குப் போய்விட்டால் பலவிதமான சந்தேகங்கள் மன எரிச்சல்—நம்பிக்கைக் குறைவு ஆகியவை இங்கே ஏற்படும். ஆகையால் அரசியலார் எந்தக் காரணத்தைக் கொண்டும் மூன்றிலொரு பகுதியோ அல்லது எந்தப் பகுதியும் மற்ற மாநிலத்தைச் சேர்ந்த நீதிபதிகளாக இருக்க வேண்டுமென்ற கொள்கைக்கு இடம் கொடுக்கக் கூடாது.

"'மாநிலப் பொது பணித் தேர்வுக் குழு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரத்தையும் இந்தியக் குடியரசுத் தலைவரிடம் விட்டுவிட்டால் நல்லது' என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"இந்த மாநிலம் எப்பொழுதும் 'தமிழ் மாநில'மாக விளங்க வேண்டும்; 'மதராஸ் ஸ்டேட்' என்ற பெயர் மறைந்து 'தமிழ் நாடு'—'தமிழகம்' என்ற அழகிய—இனிய சொற்களால் அழைக்கப்பட வேண்டும்."

'ஐக்கிய மராட்டியம் அமைக்கவும்'

இன்றேல் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவோம்

லோகியா கட்சியினர் எச்சரிக்கை

பம்பாய், டிச. 4—

பம்பாயைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மாராட்டியம், வரும் 1956-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் கிழமைக்குள் அமைக்கப்படாவிட்டால், நேரடி நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக, மேற்கு வட்டார சோஷலிஸ்டு கட்சி மாநாட்டில் கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுத் துவங்கிய அந்த மாநாட்டில் குஜராத், பம்பாய், மகாராஷ்டிரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 160 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நேரடி நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக மாநாட்டில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கடந்த நவம்பர் 21-ந் தேதியன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களும், மத்திய தர வர்க்கத்தினரும், பம்பாய் மராட்டியத்தில் இருப்பதைத்தான் ஆதரிக்கின்றனர் என்பதைக் காட்டிவிட்டதாயும், அன்று ஆர்ப்பாட்டங்களின் போது போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டதைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேறியுள்ளது.

மராட்டியர்களைச் சமாதானப்படுத்த முயற்சி

"'சம்யுக்த மகாராஷ்டிர மாநிலம்' வேண்டுமென்ற கோரிக்கையைக் கவனிக்கும்போது, அது, 'பம்பாய் நகரில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் மராத்தி மொழி பேசுவோராக இருக்கின்றனர்'என்ற காரணத்திற்காக, பம்பாயைத் தங்களுடையதாக்கிக்கொள்ள வேண்டும் என்ற நோக்குடன்—மொழி ஆர்வமிகுதியால் எழுப்பப்படும் ஒரு கோரிக்கை என்ற கருத்துத்தான் தெரிகிறது.

"மொழி, கலாச்சாரத்தை அடிப்படையாகக்கொண்டு சம்யுக்த மகாராஷ்டிரக் கோரிக்கையினர் கோரியுள்ள அவர்களது குறைகள் 'நிறைவேற்ற இயலாதவை' என்று நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

"நகரின் மக்கள் தொகையையும், வர்த்தகம், தொழில் போன்ற துறைகளில் பம்பாய் ஒரு அனைத்திந்திய முக்கியத்துவம் பெற்றிருப்பதையும் ஒட்டி, அது ஒரு தனி மாநிலமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரே மொழி பேசுவோரின் தொகை 70 சதவிகிதத்திற்கும் அதிகமாக இருந்தால்தான் இது போன்று மொழிவாரித்துவ அடிப்படையில் தனி 'யூனிட்'டாக அமைக்கக் கோர முடியும். ஆனால், 43·5 சதவிகிதம் பேர் மட்டும் மராத்தி மொழி பேசுவோரைக் கொண்ட பம்பாய் நகரை மகாராஷ்டிரத்தின் ஒரு பகுதியாக எக்காரணத்தைக் கொண்டும்—மொழி அடிப்படையிலாயினும்சரி, அல்லது கலாச்சார அடிப்படையிலாயினும்சரி—கருதிவிட முடியாது."

—என்று, சென்ற செவ்வாய்க் கிழமையன்று பம்பாய் இந்திய வர்த்தகர்கள் சபையில் நடைபெற்றக் கூட்டமொன்றில் பேசிய வர்த்தகச் சபைத் தலைவர் பாபுபாய் எம். சினாய் என்பார் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார் :—

"இப்போது இருக்கும் பம்பாய் மாநிலத்தை 3 யூனிட்டுகளாகப் பிரிக்க வேண்டுமென்ற கருத்துக்கு முடிவுகட்டிவிடாமல், ஐந்து ஆண்டுகள் வரைக்கும் அதற்கு ஒரு இடைக்காலம் விதித்திருப்பது வருந்தத்தக்கது. இவ்வாறு குறிப்பிட்டிருப்பது, நிச்சயமற்றத் தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

"காங்கிரஸ் செயற்குழுவின் முடிவுகள் எற்கனவே திரித்துக் கூறப்பட்டு, பம்பாய் நகரின் மீது மகாராஷ்டிரக் கோரிக்கையாளர்களின் துஷ்பிரச்சாரம் நடைபெற்று வருகிறது. இதனால், இங்குள்ள மக்களில் ஒரு பிரிவினருக்கு உறுதிமொழி கூறவேண்டிய பிரச்சினை கிளம்பியுள்ளது. இந்தப் பிரச்சினை, பம்பாய் குடிமக்களின் ஒரு சிறு பிரிவினரை மட்டுமன்றி, உத்தர் பாரதக்காரர்கள், குஜராத்திகள், பார்சிகள், இந்தி, கன்னடியர், தமிழர், தெலுங்கர், மலையாளிகள், பஞ்சாபிகள் போன்ற மற்றப் பெரும்பான்மையினரான மகாராஷ்டிரர் அல்லாதாரையும் பாதிக்கும் ஒரு பிரச்சினையாக மாறிவிட்டது.

"பம்பாய் நகர் குறித்து மகாராஷ்டிரர்களின் கோரிக்கை பற்றி மாநிலக் குழுவினரின் சிபாரிசிலோ அல்லது பிரதேசக் காங்கிரஸ் குழுவின் தீர்மானங்களிலோ கருதப்படவேயில்லை. பல மொழிகள் பேசப்படும் பெரிய நகரை, ஒரு மொழி மாநிலத்திற்குள் இணைத்துவிடவேண்டுமென்பதை, எவ்வகையிலும் ஒத்துக்கொள்ள முடியாது.

"மொழிவாரி, வகுப்புவாரி அடிப்படையில் மக்களிடையே துவேஷ உணர்ச்சியையும் ஊட்டுவதில் மகாராஷ்டிரத் தலைவர்கள் மிகுந்த அளவு அக்கரை செலுத்தி வருவது மிக்க வருந்தற்குரியதாகும். தேசிய ஒற்றுமையை மனதில் கொண்டுள்ள எவரும் இத்தகு விஷயங்களுக்குக் குனிந்து கொடுத்துவிடக்கூடாது."

மாநிலப் புது அமைப்பு குறித்து கம்யூனிஸ்டுகள் முரண்பட்ட போக்கு

தவறை ஒப்புகிறார் ஜீவானந்தம்!

சென்னை, நவ. 29—

"எல்லா வகையிலும் ஒருமித்த கொள்கையையே கடைப்பிடித்து வருகிறது கம்யூனிஸ்டுக் கட்சி; ஆனால், தேவிகுளம், பீர்மேடு பிரச்சினையில், சென்னை சட்டசபையில் கம்யூனிஸ்டுக் கட்சியினர் நடுநிலைமை வகித்தும், தி. கொ. மாநில சட்டசபையில் அவர்கள், தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் கேரளத்தில் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறி விவாதித்தும், வாக்களித்தும் இருப்பதுமட்டும் சரியா?" என்று, 'தேவிகுளம், பீர்மேடு பிரச்சினை குறித்துக் கம்யூனிஸ்டுகளின் நிலை என்ன?' என்பது குறித்து, நிருபர் ஒருவர், கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் தோழர் ப. ஜீவானந்தம் எம்.எல்.ஏ. அவர்களைக் கேட்டபோது, "தாங்கள் கூறியிருப்பதுபோல் செய்திருந்தால் அது தவறுதான்" *என்று அவர் கூறியிருக்கிறார்.*

மேலும் நிருபர் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்துக் கூறுகையில் தோழர் ஜீவானந்தம் குறிப்பிட்டிருக்கிறார் :—

"மொழி அடிப்படையில் மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டுமென்பதுதான் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கையுமாகும் அதனை வற்புறுத்தித்தான், மாநிலக் குழுவினரிடம் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையும் கொடுத்துள்ளது. நியாயமாகத் தமிழகத்துடன் சேர வேண்டிய ஒரு அங்குலம் பூமியையும் கம்யூனிஸ்டுகள் விடப்போவதில்லை; அதுபோல் கேரளப் பகுதியைச் சேர்ந்த ஒரு சிறு பகுதியையும் கோரப்போவதுமில்லை."

"தமிழ் நாடு, திரு-கொச்சி, மலபார், கர்நாடக கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டம் ஒன்றில், தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் கேரளத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதற்குத் தாங்கள் ஒப்புதல் அளித்திருப்பதாகக் கூறப்படுவது உண்மையா?" என்று அந்நிருபர் கேட்டபோது, தோழர் ஜீவானந்தம் அவர்கள், கட்சிக் கூட்டத்தில் நடைபெற்ற விவரங்களைக் கூறுவது சரியல்ல என்றும், தேவிகுளம், பீர்மேடு விஷயத்தில் மட்டும் கட்சிக் கொள்கையில் மாற்றமோ, விதிவிலக்கோ எதுவும் செய்யப்படமாட்டாது என்றும் கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை). வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.